கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா. 8 நாள்: 21.07.2022
அமர்வு வழக்கு எண். 42/2020

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிமாறன் | த/பெ | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் 68, எடக்குடி வடபாதி 2 ல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2016 ம் ஆண்டில் திருவெண்காடு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது எனது உதவியாளராக சந்திரசேகர் பணிபுரிந்தார். 14.03.2016 அன்று நான் என் அலுவலகத்தில் இருந்தபோது பிற்பகல் 3.30 மணியளவில் திருவெண்காடு காவல் நிலையத்தில் இருந்து ஒரு காவலர் வந்து என்னை ஆய்வாளர் அழைப்பதாக சொன்னார். அதன்போில் நானும், எனது உதவியாளரும் திருவெண்காடு காவல் நிலையம் சென்றோம். அப்போது அங்கிருந்த ஆய்வாளர் அகோரம் என்பவரை ஒரு வழக்கு சம்மந்தமாக கைது செய்திருக்கிறோம். அதனால் அரசு சாட்சி என்ற முறையில் ஒரு கையெழுத்து போடவேண்டும் என்று சொன்னார் ஆஜர் எதிரியை காவல் நிலையத்தில் நான் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் உள்ளிட்ட தடயப்பொருட்களுக்கான கைப்பற்றுதல் மகசாில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை ஆய்வாளர் சொன்னதன்போில் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். அப்போது அங்கு எதிரி இல்லை. சாட்சியின் அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

14.03.2016 பகல் 12.30 மணிக்கு ஆய்வாளர் விசாரித்ததாகவும் அப்போது எங்கள் முன்னிலையில் ஆஜர் எதிரியிடமிருந்து ஆட்டோ பிஸ்டல் இரண்டு தோட்டாக்கள் இரண்டு நாட்டு வெடிகுண்டுகள் ஆகியவற்றை திருவெண்டுகாடு சம்பா கட்டளை மாந்தோப்பில் வைத்து மகசாில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், எதிரி தடயம் ஆகியவற்றுடன் திருவெண்காடு காவல் நிலையத்திற்கு ஆய்வாளர் சென்றுவிட்டதாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது நான் அரசு ஊழியராக இருந்தும் எனக்கே தொிந்த காரணத்திற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சாியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.